அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார்
# சன்மார்க்க ஞானமுரசு

துன்முகி ஆண்டு ஆடி-ஆவணி ஆகஸ்ட் 2016 முரசு 10 ஒலி 110



உலகம் தழைக்க வந்துதித்த உருவே வருக!
ஓதாதே உற்ற கலைகள் அனைத்தினையும் உணர்ந்தோய் வருக!
ஒன்றிரண்டு அற்று இலகும் பரமானந்த சுகஇயல்வே வருக!
இம்பர்தமை இறவாக் கதியில் ஏற்றுகின்ற இறையே வருக!
என்போல்வார் கலகம் தவிர்த்துக் கதியளிக்கும் கண்ணே வருக!
கண்ணிறைந்த களிப்பே களிப்பில் ஊறுகின்ற கனிவே வருக!
கலைமதி தோய் வலகஞ்செறிந்த வடற்பதியின் வாழ்வே வருக!
இராமலிங்க வள்ளல் எனும்ஓர் மாணிக்க மணியே வருக வருகவே!

பிரதி ஒன்றுக்கு ரூ. 10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# அன்பு அருள் ஆனந்தம் உணர்த்தும்

# ஆழ்நிலை தியான முகாம்

## பசித்திரு! தனித்திரு! விழித்திரு!



## இயற்கைச் சூழலில் மூன்று நாட்கள்...

சுருள்விரிவுடை மனச்சுழல் எலாம் அறுத்தே
அருள்ஒளி நிரப்பிய அருட்பெருஞ்ஜோதி - அருட்பெருஞ்ஜோதி அகவல்

**நாள்:** ஆகஸ்ட் 26, 27 & 28 வெள்ளி, சனி, ஞாயிறு
மூன்று நாட்கள் முழுவதும்

**இடம்:** வள்ளலார் சத்திய யோக சாலை,
பெருமாள் மலை அடிவாரம், அர்த்தநாரிபாளையம்,
பொள்ளாச்சி.

**இந்த பயிற்சி முகாமில்...**

- யோகாசனம்
- பிராணாயாமம்
- மௌனம்
- ஆழ்நிலை தியானங்கள்
- திருவருட்பா பாராயணம்
- மூலிகைக் குறிப்புகள்

போன்றவை கற்றுத் தரப்படும்.

உங்களுக்கு நீங்களே இந்த மூன்று நாட்கள் வாய்ப்பளியுங்கள்.
முதலில் பதிவுசெய்யும் 80 நபர்களுக்கு மட்டுமே அனுமதி

முன்பதிவு மற்றும் விபரங்களுக்கு: 96009 80270, 94434 89849
அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் அறக்கட்டளை,
திருவண்ணாமலை.

அன்பு உள்ளங்களே! நாம் இப்பூவுலகில் ஆனந்தமாக வாழ்வதற்கே பிறந்திருக்கின்றோம். அதற்கு நம் உடல், மனம், உயிர் இம்மூன்றும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். இந்த மூன்றும் ஆரோக்கியமாக இருப்பதற்கு பஞ்ச பூதங்களினின்று நமக்குக் கிடைக்கும் சக்திகள் நம் உடலில் சரியான விகிதத்தில் நிறைந்திருக்க வேண்டும்.

இவைகளில் எது ஒன்று குறைந்தாலும் அதற்கு ஏற்பவே உடல் அல்லது மனதில் துன்பங்கள் வரும். இவைகளை சரிசெய்து கொள்வதற்கு பஞ்ச பூதங்களிலிருந்து சக்தியைப் பெறும் முறையை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இருந்த இடத்திலிருந்தே இச்சக்திகளைப் பெற்றுக்கொள்ளும் இயற்கை இரகசியங்களை நம் வள்ளல் பெருமானார் கண்டு கொண்டார்கள். அதன்மூலம் எல்லாச் சக்திகளையும் பெற்றார்கள். அதற்கு சில ஒழுக்க நெறிமுறைகளை மேற்கொண்டார்கள். வெற்றியும் பெற்றார்கள். உலகம் தழைக்க வந்துதித்த நம் வள்ளல் பெருமான் கண்ட இவ்வொழுக்க நெறிமுறைகளை எல்லா மக்களுக்கும் அறிவிக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டதே. "*ஆழ்நிலை தியான முகாம்*"

## பயிற்சியில் கலந்துகொள்ளும் அன்பர்கள் கவனத்திற்கு

1. பயிற்சியில் கலந்துகொள்வோர் ஆகஸ்ட் 25-ஆம் தேதி வியாழன் இரவிற்குள் வந்துவிட வேண்டும்.
2. 17 வயதிற்கு மேல் உள்ளவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
3. டார்ச் லைட் கண்டிப்பாக எடுத்து வரவும்.
4. அன்பர்கள் 3 நாட்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களோடு படுப்பதற்கும், யோகா செய்வதற்கும் 2 பெட்ஷீட், அணிவதற்கு ஆண்கள்: T.ஷர்ட், ஷாட்ஸ் மற்றும் பெண்கள்: சுடிதார் போன்ற வசதியான ஆடைகளை எடுத்துவரவும். குறிப்பு எடுக்க நோட்டு பேனா எடுத்து வரவும்.
5. பயிற்சியில் மூன்று நாட்கள் முழுவதும் கலந்துகொள்ள வேண்டும். ஆகஸ்ட் 27-ஆம் ஞாயிறு மாலை 5 மணிக்கு முகாம் முடிந்துவிடும்.

<u>பஸ் ரூட்:</u> பொள்ளாச்சி, உடுமலை பேட்டை ஆகிய ஊர்களிலிருந்து பஸ் வசதி உள்ளது. பழனி வழியாக வருவோர் பழனி - ஆனைமலை பேருந்தில் ஏறி ரெட்டியார் மடம் ஸ்டாப்பிங்கில் இறங்கி அர்த்தநாரிப்பாளையம், பெருமாள்மலை அடிவாரம் என கேட்டு வரவும்.

பொள்ளாச்சியிலிருந்து பஸ் எண்: 16, 27, 58 (கடைசி பஸ் இரவு 9:30க்கு)

உடுமலையிலிருந்து பஸ் எண்: 28, 34 (கடைசி பஸ் இரவு 8:30க்கு)

# கோயில் நகரம்

**திருந்தும் என்உள்ளம் திருக்கோயில்**
**ஞான சித்திபுரம் என்று சத்தியம் கண்டேன் - திருஅருட்பா**



இவ்வுடலை ஒரு நகரத்திற்கு ஒப்பிட்டுப் பார்க்க முடிகிறது. திருமூலநாதர் இவ்வுடம்பினை பெரிய கோயில் என்கிறார். சாந்தோக்ய உபநிடதம் உடம்பை வெறும் நகரம் என்று சொல்லாமல் இறைவன் வாழும் நகரம் என்று கூறி பெருமைபடுத்துகிறது. அஃதாவது கோயில்நகரம்தான் இவ்வுடம்பு. கோயில் நகரம் என்றதும் நம்கண்முன் நிற்பவை கும்பகோணமும், காஞ்சிபுரமும்தான். எண்ணற்ற கோயில்கள், வழிபாட்டுமுறைகள், கடவுளர்கள், எஞ்சி நிற்பது ஏற்றமா? ஏமாற்றமா?

**ஆரூரர் இங்கு இருக்க அவ்வூர்த் திருநாள் என்று**
**ஊர் ஊர்கள் தோறும் உழலுவீர் - நேரே**
**உளக்குறிப்பை நாடாத ஊமர்காள் நீவிர்**
**விளக்கு இருக்கத் தீத்தேடுவீர்.**

என்றும் பட்டினத்து சுவாமிகள் கூறுகின்ற மறைவாசகமும் மேற்கூறுகின்ற உண்மையைத்தான் மறைக்காமல் உரைக்கின்றன. இதன் மூலம் நாம் பெற வேண்டிய மெய்யறிவு யாதெனில், ஊர்கள் தோறும் சுற்றித்திரிந்து கோயில்கள் தோறும் வழிபாடு செய்தாலும், அப்பரம் பொருளை நெருங்க முடியாது; அடைய முடியாது; அதனுள் ஒடுங்க முடியாது என்பதே தீர்க்கமான முடிவாகும்.

நகரத்தில் எத்தனை செயல்பாடுகள் நடைபெறுகின்றனவோ, அத்தனையும் இவ்வுடல் என்னும் நகரிலும் நிகழ்ந்து கொண்டு இருக்கின்றன. எழுபத்தீராயிரம் நாடி நரம்புகளால் தலைநகரம் இணைக்கப்பட்டுள்ளது. அவற்றுள் அகலவழிப் பாதைகள் பத்து, இடைகலை, பிங்கலை, சுழுமுனை, சிங்குவை, புருடன், காந்தாரி, அக்கினி, அலம்புவி, சங்குனி, குரு எனப்படுபவை. வாதம், பித்தம், சிலேத்துமம் என்னும் மூன்றும் சமமாக அது அதன் நிலையில் ஓடவேண்டும். மாறாக ஒன்றை ஒன்று மிஞ்சி ஓடினால் உடல்நலம் பாதிக்கப்படும். முற்கால வைத்தியர்கள், நாடியைப் பிடித்துப் பார்த்து எது விஞ்சி நிற்கிறதோ அதனை சமன் செய்யவே மருத்துவம் செய்வர். வாதம் பித்தம் சிலேத்துமம் ஆகிய நாடிகள் ஒன்றை ஒன்று முரணுமேல் நாம் நம் ஆயுள் குறித்து ஐயுற வேண்டும். இதனை ஔவையார் குறும்பாக ஒரு பாடல் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

**வாதக்கோன் நாளை என்றான் வையக்கோன் பின்னை என்றான்**
**ஏதக்கோன் யாதேனும் இல்லை என்றான் - ஓதக்கேள்**
**வாதக்கோன் சொன்னதிலும் வையக்கோன் சொன்னதிலும்**
**ஏதக்கோன் சொல்லே இனிது.**

வாதக்கோன் என்பது வாதநாடி, வையக்கோன் என்பது பித்தநாடி, ஏதக்கோன் என்பது சிலேத்தும நாடி. பாழும் நோய்களால் இந்நாடிகள் படபடக்கும். ஏதாவது நமக்கு படபடப்பு வருகிறதா?

வாதம், பித்தம், சிலேத்துமம் இம்மூன்றும் ஒன்றையொன்று விஞ்சாமல் சமனாக இருக்கவேண்டுமானால் அதிகாலை சூரிய உதயாதி நாழிகையில் எழுந்து விழிப்புடன் இருக்க அறிவுரை வழங்குகிறார் நமது வள்ளல் பெருமானார். பிரம்ம முகூர்த்தம் என்று சொல்லப்படும் அதிகாலை மூன்றே முக்கால் மணியிலிருந்து ஐந்து முப்பது மணிவரையில் மேலிருந்து அமுதக்காற்று எனப்படும் சுத்தமான பிராணவாயுவாகிய அமிர்தகாற்று வீசுவதால் அவ்வேளையில் தியானம் செய்தால் வாதம், பித்தம், சிலேத்தும நாடிகள் சமனாகிறது. அவற்றுள்ளும் அதிமுக்கியமான இடகலை, பிங்கலை, சுழுமுனை நாடிகள் மூன்று. இதுவன்றி உயிருடன் உடல் இயங்குவதற்கான பத்து வாயுக்கள். பிராணன் என்ற வாயு உடலின் மேல் நோக்கிய இயக்கத்தையும். அபானன் கீழ் நோக்கிய இயக்கத்தையும், வியானன் எல்லாபக்க இயக்கத்தையும், உதானன் இறுதிக் கட்ட உயிர் வெளியேற்றத்தையும், சமானன், உணவு செரித்தல், இரத்தமாக மாற்றுதலையும், நாகன் வாந்தி ஏப்பத்தையும், கூர்மன் கண்இமைகளின் இயக்கத்தையும், கிருகலன் பசியையும், தேவதத்தன் கொட்டாவி, தனஞ்செயன் கருவுறுதலோடு உடம்பின் ஆரோக்கியத்தையும் கண்காணித்து காவல் துறையாகவும் செயல்படுகின்றன. அனைத்து செயல்பாடுகளையும் படம்பிடித்து சித்தமாகிய அந்தக் கரணத்தில் பதிவு செய்யும் இரகசியப்படப்பிடிப்புக் கருவியும் இவ்வுடம்பில் பொருத்தப்பட்டுள்ளது. இப்பத்து வாயுக்களின் கூட்டு என்பதே பிராணன் என்னும் தலைமைக்காவல் கண்காணிப்பாளர். எங்கெங்கு காணினும் சத்தியடா என்பது பிராணனே.

மண்ணின் தோற்றம் நாற்றம், நீரின் தன்மை சுவை, தீயின் தேர்வு ஒளி, காற்றின் பகுதி ஊறு, விண்ணின் கூறு ஓசை, இவ்வைந்தும் ஐம்பூதங்கள் எனப்பெறும் ஐந்து மூலங்களின் அங்கங்களாகி, ஐம்புலன்கள் எனப்பெற்று ஐம்பொறிகளின் வழியாக இயங்கி வருகின்றன.

**நிலம் தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம்**

என்பது தொல்காப்பியம். பொறிபுலன் வழிகளில் வெறியராகி சிற்றின்பம் துய்த்து ஆன்மாக்கள் வீழ்ச்சி அடையாமல், அப்புலன்வழி மெய் இன்பம் துய்த்தலாகிய இறைநலம் புரிந்து உய்வடைய வேண்டும். ஆகாயத்தின் அம்சமாக காது ஓசையையும், காற்றின் அம்சமாக மெய் பரிசமெனும் தொடு உணர்வையும், தீயின் அம்சமாக கண்கள் ஒளியையும் நீரின் அம்சமாக நாக்கு சுவையையும், நிலத்தின் அம்சமாக நாசி மணத்தையும் முகர்ந்து அறியும் செயலையும் செய்துவருகின்றன.

மேலும் இவற்றின் செயல்பாடுகளை பிருதிவி (நிலம்) குரு– நாசியிடமாக வாசனை அறிதலும், அப்பு (நீர்) சுக்கிரர் – நாவிடம் சுவையிதலும், தேயு அங்காரர் – நேத்திரமிடம் வடிவமறிதலும், வாயு புதன் – சரீரத்தில் பரிசமறிதலும், ஆகாயம் சனி – செவியிடம் சத்தமறிதலும், இராகு, கேது சாயைஎன்றும், அவை குதம் குய்யம் இருப்பிடமாகக் கொண்டு இருப்பனவென்றும் இவ்வாறு நவக்கிரகங்கள் வேலை செய்து வருகின்றன என்பதை வேதங்கள் சொல்கின்றன. தூல தேகம் சக்தி, சந்திரராம், உயிர்ப்பாகிய உயிர் சூரியர் சிவமாம்; இவ்வாறு வேதங்கள் சொல்ல, திருமூலநாதரின் திருமந்திரம் எவ்வாறு ஓதுகிறது? இவ்வுடலை நடமாடுங் கோயில் என்கிறது.

**கோயில் கொண்ட அன்றே குடிகொண்ட ஐவரும்**
**வாயில் கொண்டு ஆங்கே வழிநின்று அருளுவர்**
**தாயில் கொண்டாற்போல் தலைவன் என்னுள் புக**
**வாயில் கொண்டு ஈசனும் ஆளவந்தானே**

இவ்வுடலில் தாய்வீடாக சிவம் வீற்றிருக்கையால், பஞ்சபூதத்தின் அமைப்பான இவ்வுடலுக்குள் பஞ்சபூதத் தலைவர்களும் அவரவர் தொழிற்படும் வாயிலில் நின்று உயிருக்கு வேண்டிய அறிவை அளித்தருளுகின்றனர். இவ்வுடல் உண்டான போதே இப்பணிகளை அவரவர் செய்யத் தொடங்கினர்.

**நான்முகன் – மண் – மூக்கு – மணம் அறியவும்,**
**திருமால் – நீர் – நாக்கு – சுவை அறியவும்,**
**உருத்திரன் – தீ – கண் – ஒளி அறியவும்,**
**மகேசுரன் – காற்று – தோல் – ஊறு (பரிசம்) அறியவும்,**
**சதாசிவன் – ஆகாயம் – செவி – ஓசை அறியவும்,**

இவ்வுடலாகிய புனித நகரத்தை நடமாடுங்கோயிலை, நாடி நரம்புகள் தொடங்கி, தசவாயுக்கள், கோள்கள், பஞ்சபூதத் தலைவர்கள் என எத்தனை எத்தனை ஆளுகைக்கு உட்படுத்தப்பட்டு அருளாட்சி நடத்தப்படுகிறது என்பதை மேற்கூறியவற்றிலிருந்து நன்கு உணர்ந்து கொள்ள முடிகிறது. நாள்களின் ஓட்டம்; நம்மீது எப்போதும் கோள்களின் நாட்டம்; ஆகவே நாம் செய்யக்கூடிய ஒவ்வொரு செயலும் உறவினர்க்கும், நண்பருக்கும் மற்று உலகியலார்க்கும் வேண்டுமானால் தெரியாமல் போகலாம் அல்லது மறைத்து வைக்கலாம். ஆனால் ஐந்தொழில் செய்யும் தேவர்க்கு தெரியாமல், நவக்கிரகம் என்னும் கோள்களுக்குத் தெரியாமல் எச்செயலும் நடவாது. ஒவ்வொரு தீயசெயலும், சொல்லும் அவ்வப்போதே நமது சித்தம் என்ற அந்தக்கரணத்தில் ஒலிப்பதிவோடு ஒளிப்பதிவும் செய்யப்படுகின்றன. ஏமாற்றலாம் என்று நினைக்கலாம். ஆனால் ஏமாற்றவே முடியாது. காய்த்த மரம் கல்லடிப் பட்டே தீரும். ஒளியும் ஒலியும் நீ ஒளித்து மறைத்து வைத்திருப்பதை வெளியில் கொண்டுவந்து தண்டித்தே தீரும்.

இவ்வுடலின் ஒவ்வொரு இயக்கத்தையும் சற்று உள்நோக்கி ஆய்ந்து பார்த்தால், அற்புதமாக அதிசயமாக நடைபெறுகின்றன என்பதை உணரமுடியும். இத்தனை செயல்பாடுகளையும் நாம் அறிய முடியாமலேயே எத்துணைப் பேராற்றல் மிக்கவர்கள் அவரவர் தத்தமக்குரிய செயல்களை, பணிகளை இவ்வுடலுக்குள் நின்று நிலைபெறச் செய்துவருகின்றனர். சமுதாய வாழ்க்கை, கல்வி, கோயில், போக்கு வரத்து, நதிகள், உணவு உற்பத்தி, சுத்திகரிப்பு, கழிவை வெளியேற்றுதல், காவல் என ஒன்று விடாமல் எல்லாத் துறைகளும் இவ்வுடலினுள் உள்ளன.

மேற்கூறிய செயல்கள் அனைத்தும் ஒரு நகரத்தில் தவறாமல் நடப்பதைப் போலவே, கோயில் நகரமாகிய, நடமாடுங்கோயிலாகிய, பிரம்மபுரமாகிய இறைவன் வாழும் நகரமாகிய, ஆன்மா வாழும் இவ்வுடலிலும் நடைபெறுகின்றன என்று நம் முனிவர்கள் அக்காலத்திலேயே அருளியுள்ளனர்.

நமது முனிவர்கள் அறிவியலின் துணை இல்லாமலேயே இதனை உணர்ந்து அறிந்து உள்ளதை உள்ளவாறே கூறி இருப்பது வியக்கத்தக்கதே. உலகில் இறைவன் அருளாட்சி நடத்தி இயக்குவதைப் போலவே ஆன்மாவின் உள்ளிருந்தும் எல்லா தத்துவங்களையும் இயக்குவிக்கிறது, பேசவைக்கிறது, நடக்க வைக்கிறது, ஓடவைக்கிறது, உழைக்க வைக்கிறது, உண்ண வைக்கிறது, உறங்க வைக்கிறது, நல்வினை தீவினைகளை சித்தம் என்னும் அந்தக்கரணத்தில் பதிய வைக்கிறது, உடலின் செயல்பாடுகள் நியதிக்குக் கட்டுப்படாத நிலையிலும்சரி அதே சமயம் முன் வினைகளின் விதிப்படி கட்டுப்பட்டும்சரி எந்த நேரத்தில், எந்த வயதில், எந்த வினையின் விளைவால், இன்ன செயலின் முடிவால் அதுவும் எதனால் நிகழ்த்தப்பட வேண்டுமோ அதனால் அணுவளவும் பிசகாமல் நிகழ்ந்து அக்கணப் பொழுதில் உயிர் உடலைவிட்டுப் பிரிந்தும் செல்லுமாறு அருளரச நடத்துகிறார்.

சாதாரணமாக ஒரு சமுதாய மாற்றத்திற்குக் கூட தனி மனித ஒழுக்கம் மிக முக்கியம் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றே. அதுபோல் கோயில் நகரமாகிய இந்த தேகத்தில் அனேக செயல்பாடுகள் தன்னிச்சையாக நடந்தபோதிலும் ஒவ்வொரு ஜீவனின் கடமை என்ன?

கிடையாத பொருளிடத்து ஆசையும், ஆசைதடைபட்ட இடத்துக் கோபமும், ஆசைப்பட்ட பொருளுக்கு உரிமையாளர் அறிந்தால் என்செய்வாரோ என்ற அச்சமும், அச்சங் காரணமாக எழும் துக்கமும், பெருமை உடையாரது செல்வத்தைக் கண்டு பொறாமையும் கூடாது. ஈண்டு செல்வம் என்பது சிவந்திகழ் ஞானமும் அதனால் பெறுகின்ற பேறுமேயன்றி பொருளுடைமையாகா. ஏனெனில் பொருட் செல்வம் பூரியார் கண்ணும் (இழிந்தவரிடத்தும்) உளது என்கிறது திருக்குறள். மேலும் பிறர் குற்றங்களை மட்டும் பேசி, எவ்வாற்றானும் தன்னை உயர்த்திக் கொள்ளவே முடியாது. ஞானம் என்பது ஊனம் சிறிதும் இல்லா ஒழுக்க நெறி. பிறருக்குக் கேடு உண்டாகும்படி பேசுதலும், தன் தகுதிக்கும்,

செய்கைக்கும், எண்ணத்திற்கும் பொருந்தாத புகழினை விரும்புதலாகிய சிறுமையும் ஆகிய இவை உடைமை ஞான ஒழுக்கத்திற்கு தவறுதலாகும்.

இவ்வாறு தேவிகாலோத்தரம் என்ற நூல் நன்னெறிகளைப் பிடித்து ஒழுக உத்தரம் அளிக்கிறது. எனவே, ஞானியைப் பூசித்தவர் சிவ புண்ணியத்தையும், மாறாக தூசித்தவர் கொடிய பாவத்தையும் அடைவர் என்பதும் உத்தரம். அதோடு மெய்ஞானியர்க்கு சிறிதளவாய் நன்மை செய்திட்டாலும் அது மலை அளவாய் செய்தவர்க்குப் பயன்கொடுக்கும். ‘பசி வந்திடப் பத்தும் பறந்து போம்’ என்பதாலும், அழிபசி அஃதாவது உயிரை அழிக்கும் பசி என்ற தெய்வப்புலவன் ஐயன் திருவள்ளுவன் திருவாக்காலும், பசியானது தவத்தையும் அழிக்கும் என்ற காரணத்தாலும் தவசியர்க்குப் பசி நீங்கும் பொருட்டு அன்னத்தை உண்பித்தவன், தவமுடையார் தவப்பலத்தின் பாதியைப் பெற்றுவிடுகிறான் என்பதோடு, ஞானியின் பசியை நீக்குதலால் ஞானத்தையும் அடைகிறான் என்பதும் பொருந்தும். தேவிகாலோத்திரம் இதனை இவ்வாறு உரைக்கிறது.

**சொன்ன ஞானி தனைத்துதி செய்தவர்**
**முன்னஞ் செய்யறம் முற்றும் அடைகுவர்**
**இன்னல் சொன்னவர் எய்துவர் வன்பவம்**
**அன்னம் ஈபவர் அசைவின்ஞா னஞ்சேர்வார்.**

இதனையே நம் வள்ளல் பெருமானார் தருநெறி எல்லாம் உள் வாங்கும் சுத்த சமரச சன்மார்க்கம் என்றே தனிப்பெயர் கொண்டு ஓங்கும் திருநெறியில் பசி என்பது எல்லா உயிர்க்கும் பொதுவான பெரும்பிணி என்றுணர்ந்து ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடென வகுத்தருளினார்.

மேலும் சத்விசாரமும், பரோபகாரமுமே சன்மார்க்கத்தின் சாதனம் என்றுரைத்தார்கள். இவ்விரண்டையும் மேற்கொள்ளும் சாதகன் திருவருளால் மனிதப் பிறப்பின் நோக்கமாகிய வீடுபேற்றினை அடைவதென்பது திண்ணம் என்றும் அருளியுள்ளார்.

திருச்சிற்றம்பலம்

## ஜீவகாருண்ய ஒழுக்கம்

**ஏன் நாம் பிற உயிர்களுக்கு கருணை காட்ட வேண்டும்?**

ஜீவர்களெல்லாம் ஒரு தன்மையாகிய இயற்கை உண்மை ஏகதேசங்களாய்ச் சர்வ சக்தியுடைய கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட படியால் ஓர் உரிமையுள்ள சகோதரர்களே ஆவர். சகோதரர்களுள் ஒருவர் ஒரு ஆபத்தால் துக்கப்படுகின்றபோதும், துக்கப்படுவார் என்று அறிந்தபோதும் அவரைத் தமது சகோதரர் என்ற கண்ட மற்றொருவருக்கு உருக்கம் உண்டாவது சகோதர உரிமையாகலின், ஒரு ஜீவன் துக்கத்தை அனுபவிக்கக் கண்டபோதும், துக்கப்படுமென்று அறிந்தபோதும் மற்றொரு ஜீவனுக்கு உருக்கம் உண்டாவது பழைய ஆன்ம உரிமை என்று அறிய வேண்டும். - உரைநடைப்பகுதி

Advertisement

## மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி



தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

### ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு

தர்மசாலை பலர் சகாயத்தினாலேயே நிலைபெற வேண்டுமாதலால், ஜீவதயவுள்ள புண்ணியர்கள், தங்கள் தங்களாற் கூடிய வரையில் பொருள் முதலிய உதவி செய்து அதனால் வரும் லாபத்தை பாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்பது எங்கள் கோரிக்கை.


வள்ளலார் தீஞ்சுவை நீரோடை தர்ம சாலை, என்ற பெயருக்கு
S/B A/c.No.10895139303, IFSC# :SBIN 0000958; SWIFT:SBIN INBB457
ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, நெய்வேலி கிளை
CT: 9842679999 / 9442327059 , 04142-259143

**வாடகை - ரூ666 முதல்! தவணை - ரூ999 முதல்!!**

**Anti-Virus** ( Free )

**OS** ( Licenced )







**பழையது ! தரம் உயர்த்தப்பட்டது !! புதியது !!!**

**Old Refurbished New**

## BeyondexC Network Solutions

பியான்டக்ஸ்சி நெட்வொர்க் சொல்யூசன்ஸ்
#174/321,ஆற்காடு ரோடு, தோஷி கார்டன், அடிதளம்#20,
வடபழனி, சென்னை - 600026.
போன்:+91(44)43069262,9444408804,9840398666
eMail:govee@virtues2goal.com

# திருமந்திரம்

**இந்தியம், அந்தக் கரணம் இவை உயிர்**
**வந்தன சூக்கம் உடலன்று, மான் – அது**
**தந்திடும் ஐவிதத்து ஆற்றற் புருடனும்**
**முந்துஉளம் மன்னும் ஆறாது முடிவிலே. – தத்துவங்கட்கு அப்பால்**

ஆன்மா ஞானேந்திரிய, கன்மேந்திரியங்கள், அந்தக் கரணம், பிராணன் ஆகியவை வந்து அமைந்தனவாகிய சூக்கும வுடலோ தூலவுடலோ அன்று. இவை அனைத்தும் பிரகிருதி மாயையிலிருந்து தோன்றியவையே. வித்தியா தத்துவங்களாகிய காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் ஐந்துவகை ஆற்றல்களை ஆளும் புருடனோ என்றால், அதுவும் அன்று. (அதுவும் தத்துவமே. அது இவ்வைந்துடன் அசுத்தமாயையில் தோன்றுவதே) இவை எல்லாம் உள்ளிட்ட முப்பத்தாறு தத்துவங்களும் அல்லாதது. அவற்றை விலக்கி நிற்கும்பொழுது, ஆன்மா தன்னைத் தானே உணரும்.

**வித்துப் பொதிவார் விரைவிட்டு நாற்றுவார்**
**அற்றதம் வாணாள் அறிகிலாப் பாவிகள்**
**உற்ற வினைத்துயர் ஒன்றும் அறிகிலார்**
**முற்றொளி தீயின் முனிகின்ற வாறன்றே. – கேடுகண்டு இரங்கல்**

வித்தின்பொருட்டு நெல்லை நன்றாக உணக்கிப் பேணி வைப்பர். பின் விதைவிதைத்து நாற்றுண்டாக்குவார்கள். உடலுக்கு வேண்டும் உணவினைத் தேடி எத்துணைப் பாடுபடுகின்றனர். இவர்கள் தங்களுடைய வாழ்நாள் இன்னும் எத்துணைப்பொழுது நிற்கும் என அறிய எவ்வகை முயற்சியும் செய்கின்றிலர். செய்வாரேல் நன்னெறி வழி நாளும் ஒழுகுவர். அங்ஙனம் ஒழுகாமையால் தம் வாழ்நாள் அற்ற தன்மையினை அறிகின்றிலர். இவர்களே பழுது அகலா முழுப்பாவிகளாவர். மேலும் தங்களை வந்து பொருந்தும் இருவினைத் துன்பத்தினைப் பற்றி ஒன்றும் அறிகிலர். இவர்கள் இன்புற எண்ணும் உலகப்பற்றின் வழியே மாண்டுமடிகின்றனர். முனிகின்றது; மடிகின்றது. இதற்கு ஒப்பு முற்றொளி என்று சொல்லப்படும் நிறைந்த விளக்கொளியின்முன் விட்டிற்பூச்சி வீழ்ந்து மாண்டுமடிகின்றதாகும். விட்டிற்பூச்சி அவாய் நிலையான்வந்தது.

**இன்பத்துளே பிறந்து, இன்பத்துளே வளர்ந்து**
**இன்பத்துளே நினைக்கின்றது இது மறந்து**
**துன்பத்துளே சிலர், சோறொடு கூறை என்**
**துன்பத்துளே நின்று தூங்குகின்றாரே. – பிறப்பு வளர்ப்பையும் அறியவில்லை**

இன்பத்தில் பிறந்து, இன்பத்தில் வளர்ந்து, இன்பத்தையே நினைப்பதைவிட்டு, சிலர் துன்பத்திலே அழுந்தி, உணவு என்றும் உடை என்றும் அலைந்து, வினைகளைப் பெருக்கி, துன்பத்தினை மேன்மேலும் அனுபவித்துச் செய்வதறியாது வாழ்கின்றனர்.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனு
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி இல்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்மினே. – உன்னில் நில்

உயிர்க்குலம், தம்முள் வேறுபாடு இருப்பினும், அன்பினால் ஒன்றிநிற்க வேண்டுவதே குறிக்கோள். அவ்வொருமைப்பாட்டில் சிவம் விளங்கும். ஆதலின், யாவரிடத்தும் தயங்காது அன்பு செய்து, அன்பில் ஊன்றிநின்றால் இறப்பு இல்லை. சிவகதி பெறலாம். அன்பின் உள்ளொளி அருள். அருளின் உள்ளொளி சிவம். எனவே சாதி, இனம், நாடு, மொழி, உயிர்வகை முதலிய வேறுபாடு பாராது அன்பு செய்க. இந்நிறைவு இங்கே, இப்போதே பெறுதற்குரியது; வேறு உலகில் பிறந்து பெறுவது அன்று. உயிருணர்வை அன்புமயமாக்கி, அதில் இடையறாது நிற்பீராக.

திருச்சிற்றம்பலம்

## மூத்தோர்சொல் அமிர்தம்

அவன் ஓர் அரசன். அரச போகங்கள் அவனுக்கு அலுத்துவிட்டன. வாழ்வின் நிலைமையை உணர்ந்து ஆன்ம விழிப்புணர்வு ஆகியவற்றின்பால் இப்போது அவன் அதிக நாட்டம் கொண்டான். அதனால் ஒரு நல்ல குருவிடம் உபதேசம் பெற்று ஞானம் பெற அவன் விரும்பினான்.

குரு ஒருவர் இருப்பதை அறிந்து அவரை நாடிச் சென்றான். அவரிடம் தன் மன விருப்பத்தை வெளியிட்டான்.

குரு சிரித்தார். "ஞானம் கிடக்கட்டும். முதலில் ஞானம் பெற உன்னைத் தகுதியாக்கிக் கொள்!" என்றார்.

மன்னனுக்கு விளங்கவில்லை.

"பயிர்களை ஒரு நிலத்தில் விதைக்க வேண்டுமென்றால் அந்த நிலம் முதலில் உழுது பண்படுத்தப்பட வேண்டும். அதுபோல முதலில் உன் மனத்தை நீ பக்குவப்படுத்து!" என்றார் அந்த குரு.

அவர் சொன்ன தத்துவம் நன்றாகத்தான் இருந்தது. என்றாலும் அதன் பொருள் விளங்கவில்லை மன்னனுக்கு.

அவர்கள் பேசிக்கொண்டே வந்தபோது சீடன் ஒருவன் துடைப்பத்தால் அந்த இடத்தைப் பெருக்கிக் கொண்டு வந்தான். அதனால் புழுதி பறந்தது. காற்றில் தூசு, தும்புகள் பறந்து வந்து மன்னனின் அழகிய ஆடைகள் மீது படிந்தன.

மன்னன் அதைக் கடும் கோபத்துடனும், எரிச்சலுடனும், குருவிடம் சுட்டிக் காட்டினான். மிகுந்த மன உளைச்சலுடன், சீடன் மீது குற்றச்சாட்டுக் கூறினான்.

குரு சிரித்தபடியே, "உன்னிடத்தில் பாம்புகள் நிறைய இருக்கின்றன. போய் அதை அப்புறப்படுத்து!" என்றார்.

மன்னன் சிந்தனையுடன் போய்விட்டான். ஓராண்டு கழித்து மன்னன் இரண்டாம் முறையாக அங்கு வந்தபோது, அதே சீடன் பெருக்கிக் கொண்டு இருந்தான். அப்போது வீசிய காற்றில் அவன் பெருக்கியதால் ஏற்பட்ட புழுதி அரசன் மேல் வாரியடித்தது. இம்முறை மன்னன் குருவிடம் குறை கூறவில்லை. நேராக அந்தச் சீடனிடமே சென்று "கண் தெரியவில்லையா? ஆட்கள் வரும்போது பார்த்துப் பெருக்கு!" என்ற கடுமையான குரலில் சண்டையிட்டான்.

இம்முறை குரு, "உன்னிடம் நாய் இருக்கிறது. போய் அதனை விரட்டு!" என்றார்.

மூன்றாம் முறை மன்னன் வந்தபோது, சீடன் ஒரு வாளியில் கரைசலுடன் வந்தவன் தெரியாமல் மன்னன் மீது மோதியதில் உடைகள் மீது தெறித்தது கரைசல். இப்போது மன்னன் கோபிக்கவேயில்லை. "நன்றி!" என்றான் அமைதியுடன்.

இம்முறை குருவே ஓடி வந்து, மன்னனை எதிர்கொண்டு, "நீ ஞானம் பெற முழுத் தகுதியானவன்" என்றார்.

இக்கதையினின்று நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன? ஞானம் என்பது விவாதித்தல் அல்ல. விவாதம் கடைசியில் இலக்கை விட்டு நம்மைநெடுந்தூரத்திற்கு விலகச் செய்துவிடும். ஞானம் என்பதே எதையும் மறுத்தல் அல்ல. அதை அதை அப்படியே ஏற்றுக் கொள்வதுதான்.

சகிப்புத் தன்மையே ஞானத்தின் திறவுகோல். சகிப்புத் தன்மை இல்லாத ஞானம் வெறும் அறிவின் அகந்தை என்கிறார்கள் ஞானிகள்.

**அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம். – குறள் 35**

**பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய இந்த நான்கு குற்றங்களுக்கும் இடங்கொடுக்காமல் அவற்றைக் கடிந்து ஒழுகுவதே அறமாகும்.**

---

ஆழ்ந்த தேடல் வேட்கையில் ஒருவர் ஈடுபட்டிருந்தார். ஞானவேட்கை அவரிடம் நிரம்பியிருந்தது. எதை எதைக் கேள்விப்படுகிறாரோ அதையெல்லாம் முயன்று பார்ப்பதே அவரது செயலாயிருந்தது.

பற்றுகளைத் துறப்பதே ஞானவாயிலின் திறவுகோல் என்றனர் பலர். அவர் தன் உடைமைகளை உதறினார். தன் சொத்துக்களை உதறினார். இருக்கும் இடம் கூட ஒரு பற்றுதல் என எண்ணி ஊர் ஊராக அலைந்து திரிந்தார். அப்படியும் அவர் திருப்திபெறவில்லை. மேலும் சாதனையில் முன்னேற வேண்டுமென ஆவலாய் அலைந்தார்.

வழியில் ஒருவரைச் சந்தித்தார். அவர் முகத்தில் நிலவிய சாந்தமும் கண்களில் தென்பட்ட எல்லையில்லாப் பேரானந்தமுமே அவர் ஒரு குரு என்பதை உணர்த்தின.

அந்தக் குருவை வணங்கினார்.

"குருவே! நான் ஞானத்தைத் தேடி அலைகிறேன்!" என்றார்.

"அப்படியா?" என்றார் குரு.

"ஆம். நான் பாசங்களை உதறி விட்டேன். உடைகளை உதறி விட்டேன். பற்றுகளைத் துறந்துவிட்டேன். இப்போது என் மனம் நிச்சலனமாய் இருக்கிறது!" என்றார்.

"அப்படியா? சரி. அதை விட்டுவிடு!" என்றார் குரு.

வந்தவர் முகத்தில் பெரும் திகைப்பு.

"குருவே! நான்தான் எல்லாவற்றையும் விட்டுவிட்டதாகச் சொன்னேனே! இப்போது என் மனதில் வெறுமைதானே குடிகொண்டு இருக்கிறது?"

"சரி. அதையும் விட்டுவிடு!" என்றார் குரு.

**விட்டுவிட்டேன் என்ற நினைவையும் விட்டுவிட்டுச் சும்மா இருத்தலே ஞானம் என்று குரு தனக்கு உணர்த்த வருவது அந்த சாதகருக்குப் புரிந்தது.**

**ஓங்கார அணைமீது நான்இருந்த தருணம்**
**உவந்தெனது மணவாளர் சிவந்த வடிவகன்றே**
**ஈங்காரப் பளிக்கும் வடிவெடுத்து எதிரே நின்றார்**
**இருந்தருள்க எனஎழுந்தேன் எழுந்திருப்பது என்நீ**
**ஆங்காரம் ஒழிஎன்றார் ஒழித்தனன் அப்போது**
**நான்தானோ அவர்தானோ அறிந்திலன்முன் குறிப்பை**
**ஊங்கார இரண்டுருவும் ஒன்றானோம் ஆங்கே**
**உறைந்த அனுபவம் தோழி நிறைந்த பெருவெளியே. – திருஅருட்பா**

திருச்சிற்றம்பலம்

**சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய**

## ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை

**ஆ**ன்ம நேய ஒருமைப்பாடு என்பது மன்னுயிர்த் தொகுதி எல்லாவற்றையும் ஓர் இனமெனக் கருதி, எல்லா உயிர்களிடத்தும் அன்புடையராய் ஒழுகும் ஒருமை உணர்வின் இன்றியமையாமையைக் குறிப்பதாகும். ஆன்மா – உயிர்; நேயம் – அன்பு; ஒருமை – அன்பெனும் வலையால் எவ்வுயிரையும் தம்முயிர்போல் எண்ணும் மனத்தின் ஒருமைப்பாடு. உயிர் என்பது காட்சிக்குப் புலனாகாத அருவப்பொருள்; "காணாமரபிற்று உயிரென மொழிப" (தொல் – களவியல் – சூ – 10ந. உரைமேற்கோள்) என்பது பழம்பாடல். காணமுடியாத உயிரின் உண்மையைக் காணப்படும் அதன் உடம்பினைக் கொண்டு நாம் கருதி யுணர்கின்றோம். உயிரோ உணருந்தன்மையது, உடம்போ உணர்வற்றது. உயிர் என்றும் அழியாத நிலைபேறுடையது, அது பற்றியே அதனை "மன்னுயிர்" என வழங்குகிறோம். உயிரினது நிலைக்களமாகிய உடம்போ

அழியக்கூடியது. அறிவில்லாததும் அழியக்கூடியதுமாகிய இவ்வுடம்பிற்கும் அறிவுடையதும் நிலைபேறுடையதுமாகிய உயிருக்கும் உண்டாகிய தொடர்புக்குக் காரணம் யாது என்னும் ஐயம் எழுதல் இயல்பு. இங்ஙனம் தோன்றும் ஐயத்தினை நீக்கி உயிருக்கும் உடம்புக்கும் ஏற்பட்ட தொடர்பினை விளக்கும் முறையில் அமைந்தது "அன்போடு இயைந்த வழக்கென்ப, ஆருயிர்க்கு என்போடியைந்த தொடர்பு" (குறள் 78) என வரும் திருக்குறளாகும். காணா மரபினதாகிய உயிர்க்குக் காணப்படும் உடம்போடு உண்டாகிய தொடர்ச்சியினை 'அன்பெனும் உயிர்ப்பண்பினை வளர்த்தற் பொருட்டு வந்த நெறியின் பயன் என்று சொல்லுவர் அறிந்தோர்' என்பது இதன் பொருளாகும். அருவமாகிய உயிர்கள் உருவமாகிய உடம்பினைப் பெற்றாலல்லது தம்முள் அன்பினை வளர்த்தல் இயலாமையால் அன்பாகிய உயிர்ப் பண்பினை வளர்த்தற் பொருட்டே அருவாகிய உயிர்க்கு உருவாகிய உடம்பு அளிக்கப் பெற்றது என்பதாம். 'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி' என்றாங்குப் புல் முதல் மக்கள் ஈறாகிய உடம்புகள் உயிர்க்குப் படிகால் முறையாகப் படைத்து வழங்கப் பெற்றன என்பர் பெரியோர்.

ஓரறிவுயிராகிய புல்முதல் ஆறறிவு உயிராகிய மக்கள் ஈறாக எல்லா உயிர்களும் தாம் பெற்றுள்ள உடம்புகளால் வேறுபட்டுத் தோன்றினும், ஊழ்வினை காரணமாகப் பிறக்கும் பிறப்பு இயல்பினால் ஒத்த தன்மையுடையனவே என்பது, 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' (972) எனவரும் வள்ளுவர் வாய்மொழியால் நன்கு விளங்கும். உயிர்கள் செய்த நன்றும் தீதுமாகிய இருவினைப் பயன்களை, செய்த உயிர்களே அனுபவிக்கும்படி வரையறுத்து ஊட்டுவது ஊழாகிய நியதி தத்துவமென்ப. இறைவனது ஆணையாகிய திருவருட் சத்தியெனப்படும் இந்நியதி காரணமாகவே உலகிற் பல்வேறு உயிர்களும் பல்வேறு உருவினைகளைப் பெற்றனவாய், மாறிப் பிறந்து வருகின்றன. இவ்வாறு உயிர்த்தொகுதிகள் தாம் தாம் பிறக்கும் இடவகையாலும் அவ்வப் பொழுது மேற்கொள்ளும் உடல் வகையாலும் வேறுபட்டனவாயினும், உணர்வுடைய பொருளாய் உயிரெனப் பேசப்படுந்தன்மையில் ஒற்றுமையும், உயிர்ப்பண்பாகிய அன்பின் தொடர்ச்சியினால் உறவும் உடையனவேயாம். இவ்வுண்மையைச் சங்க காலச் சான்றோர் தம் அனுபவத்தால் உணர்ந்து, ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்கு வித்திட்டுள்ளார்கள். இந்நுட்பம்,

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா"**

என வரும் கணியன் பூங்குன்றனார் பாடலால் உய்த் துணரப்படும். வானத்தினுலவும் மேகம் பெருமழையைப் பெய்தமையால் உண்டாகிய வெள்ளப் பெருக்கு மலை முகட்டில் உள்ள கற்களை அலைத்துக்கொண்டு பேராறாக இழியும் நிலையினை ஒத்தது உலகினை இயக்கும் பேராற்றலினால் முறைப்படுத்தப்படும் ஊழாகிய நியதி என்பதும், அவ்வாற்றினால் ஈர்த்துச்

செல்லப்படும் மிதவை (தெப்பம்) போன்றது மன்னுயிர்த் தொகுதி என்பதும், ஊழின் வயப்பட்ட உயிர்கள் உலகிற் பல்வேறு நாடுகளிலும், பல்வேறு இனங்களிலும், பிறந்தும், இறந்தும் உழன்று இருவினைப் பயன்களை நுகர்தலின், அவ்வுயிர்கட்கும் யாதும் ஊரே, யாவரும் உறவினரே என்பதும், மக்கள் அடையும் நன்றும் தீதும் ஆகியன பிறரால் தரப்படுவன அல்ல. அவரவர் செய்த வினையின் பயனாகத் தாமே வருவன என்பதும், உலகிலேயே மக்கள் பெறும் உயர்வு தாழ்வுகட்கு அன்னோர் இயற்றிய இருவினையாகிய ஊழ் என்னும் முறைமையே காரணமாதலால் நல்வினையால் உயர்ந்த பெருமக்களை வியந்து புகழ்தலையோ, அன்றித் தீவினையால் தாழ்வுற்ற சிறியவர்களை எண்ணி இகழ்தலையோ மெய்யுணர்ந்தோராகிய தத்துவ ஞானிகள் ஒருபோதும் மேற்கொள்ள மாட்டார்கள் என்பதுமாகிய உண்மைகள் இப்பாடலில் தெளிவுபடுத்தப் பெற்றுள்ளமை காணலாம்.

படைப்புக் காலந் தொடங்கி மன்னுயிர்கள் ஊழ்வினை காரணமாகப் பல்வேறு நாடுகளிலும் பல்வேறு உடம்புகளிலும் பிறந்திருந்து அலமரு நிலையில், அவ்வுயிர்கட்கு யாதும் ஊராகவும், யாவரும் உறவினராகவும் அமைந்துள்ள திறத்தினை,

**"அகில லோகமும் அனந்த யோனியும்**
**நிகிலமும் தோன்ற நீ நினைந்தநாள் தொடங்கி**
**எனைப்பல யோனியும் நினைப்பரும் பேதத்து**
**யாரும் யாவையும் எனக்குத் தனித்தனித்**
**தாய ராகியும் தந்தைய ராகியும்**
**வந்திலாதவர் இல்லை யான் அவர்**
**வந்திரா ததும் இல்லை முந்து**
**பிறவா நிலமும் இல்லை அவ்வயின்**
**இறவா நிலமும் இல்லை"**

**(11 ஆம் திருமுறை – திருக்கழுமலமும்மணிக்கோவை 7)**

எனத் திருவெண்காட்டு அடிகள் விரித்துக் கூறியுள்ளார். இங்கு எடுத்துக் காட்டிய பாடற் பகுதி "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என வரும் புறநானூற்று அடிக்குரிய உரை விளக்கமாக அமைந்துள்ளமை காணலாம்.

உயிர்களுக்கு மறுபிறப்பு உண்டு என்னும் கொள்கையை ஒப்புக்கொண்ட புத்த சமண சமயத்தாரும், இரு வினைப் பயனால் இறந்த உயிர் மீளவும் பிறக்குங்கால் வெவ்வேறு இடங்களிற் சென்று பிறக்கும் எனவும், அவ்வுயிரிடத்தே அன்பு செலுத்துவோர் அஃது எங்கே பிறந்தது என்று அறியமுடியாமையால் எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்துதல் வேண்டும் எனவும் கூறுவர். சோழ இளவரசனாகிய உதயகுமாரன் என்பான், மாதவியின் மகள் மணிமேகலையை விரும்பி அவளைப் பின் தொடர்ந்து செல்லும்போது, துறவியாகிய அவள் காயசண்டிகை என்ற

பெண்ணின் வடிவமுடையவளாக உருமாறினாள். காயசண்டிகையின் கணவனாகிய வித்தியாதரன் அவள் மணிமேகலை என்பதை அறியாமல் தன் மனைவி காயசண்டிகையே என எண்ணி அவளைத் தொடர்ந்து வந்த உதயகுமாரனை வாளால் வெட்டி வீழ்த்தினான். அதனைக் கேட்ட சோழ மன்னன் தன் மகன் இறந்ததற்குச் சிறிதும் வருந்தாமல், மணிமேகலையைச் சிறையில் வைத்தான். தன் புதல்வனை இழந்த அரசமாதேவி தன் மகன் இறந்ததற்குக் காரணமாயிருந்த மணிமேகலையை இனி உயிரோடு வைக்கமாட்டேன் எனச் சினமுற்று மணிமேகலையைச் சிறையினின்றும் விடுவித்து, அவளைப் புழுக்கறையில் அடைத்துப் பலவாறு துன்புறுத்தினாள். தான் பெற்ற மந்திர ஆற்றலால் அத்துன்பங்களை யெல்லாம் பொறுத்துக் கொண்ட மணிமேகலை, சிறிதும் மாற்றமின்றிக் காணப்பட்டாள். அதனைக் கண்டு வியந்த அரசமாதேவி நடுக்கமுற்றவளாய், 'என்மகனை இழந்த துன்பத்தால் உனக்கு இத்தகைய கொடுமைகளைச் செய்தேன். இவற்றைப் பொறுத்தருள வேண்டும்' என மணிமேகலையைப் பலவாறு வேண்டினாள்.

அது கேட்ட மணிமேகலை 'சென்ற பிறப்பில் நீலபதியின் வயிற்றில் தோன்றிய இராகுலன் என்பவனைத் திட்டிவிடம் என்ற பாம்பு தீண்ட அவன் இறந்தபொழுது, அவன் மனைவியாக இருந்த யான் அத்துயரத்தைப் முடியாது தீயிற் பாய்ந்து உயிர் துறந்தேன். அவ்விராகுலனே இப்பிறப்பில் உனக்கு மகனாக வந்த உதயகுமாரனாவான். அவன் முன்பிறப்பில் பாம்பு தீண்டி இறந்தபொழுது அவனது பிரிவாற்றாது யான் தீப்பாய்ந்து உயிர் விட்ட அந்நாளில் இளவரசனாகிய அவன் பொருட்டு அரசியாகிய நீ எங்கிருந்து அழுதாய்? அப்பொழுது அவனுக்கும் உனக்கும், மகன்–தாய் என்னும் உறவு முறைமை இல்லாமையின் அழாதிருந்தாயல்லவா? பூங்கொடி போல்பவளே! இப்பொழுது அவன் உன் மகனாகிய நிலையில் இறந்த பொழுது பிற உயிர்க்குத் தீங்கு செய்தலாகிய பொருந்தாத செயல்களைச் செய்துவிட்டாய்.

இனி நீ நின்மகனது உடலை நினைந்து அழுதாயா? அல்லது அவனது உயிரை நினைந்து அழுதாயா? உடலை நினைந்து அழுதாயானால் அவனது உடம்பையும் எண்ணெய் முதலிய பாதுகாப்புப் பொருளில் பேணி வைக்காமல் அதனை இடு காட்டில் இட்டவர்கள் யார்? அப்படியில்லாமல், உயிரை நினைந்து அழுதாயானால் அவ்வுயிர் சென்று புகும் உடம்பு அவ்வுயிர் செய்த வினைப்பயனால் பெறுவதாதலின் யாராலும் தெரிந்து காணுதற்கரியதாகும். அவ்வுயிர்க்கு, உண்மையான அன்பினைச் செலுத்துவாயானால், அவ்வுயிரோடு தொடர்புடைய எல்லா உயிர்களிடத்திலும் இரக்கமுள்ளவளாய் அன்பு செலுத்துதல் வேண்டும்' என ஆன்மநேய ஒருமைப் பாட்டுணர்வினை அறிவுறுத்துவதாக அமைந்தது.

ஆருயிர்களிடத்திலே செலுத்தும் அன்பு எவ்வுயிர்க்கட்கும் உயிராகிய சிவபரம்பொருளிடத்தும் சென்று சேரும் இயல்பினதாகும். உயிர்ப்

பண்பாகிய அன்புக்கும், உயிர்க் குயிராகிய சிவத்துக்கும் உள்ள பிரிக்கமுடியாத அன்பின் தொடர்பினை உணர்த்துவது,

**"அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்திருந் தாரே" (திருமந்திரம் 270)**

என வரும் திருமந்திரமாகும்.

இறைவனையடைவதற்குச் சாதனமாகிய அன்பும் அதனால் அடையத்தகும் பயனாகிய சிவமும் என அன்பையும் சிவத்தையும் இரு வேறு பொருளாகப் பிரித்துரைப்பர் அவற்றின் இயல்பினை உள்ளவாறு அறியாதார். உயிர்களிடத்துக் காணப்படும் அன்பே சிவ பரம்பொருளின் விரிந்த விளக்கமாகும் என்பதை எத்துணை அறிஞர்களும் உள்ளவாறு அறியாது போயினர். உயிர்ப்பண்பாகிய அன்பே சிவத்துவ விளக்கமாகும் என்னும் இம்மெய்ம்மையினை யாவரும் (அனுபவத்தால்) அழுந்தி அறிந்த பின்னர் அன்னோர் எவ்வுயிரிடத்தும் விரிந்து விளக்குவதாய்த் தம்பால் நிலைபெற்ற அன்பே சிவமாகி விரிந்து தோன்ற அத்தகைய சிவத்தின் வியாபகத்துள்ளே (விரிவினுள்ளே) அன்புருவாய் பிரிப்பின்றி அமர்ந்திருந்தார்கள் என்பது இத்திருமந்திரத்தின் பொருளாகும்.

எவ்வுயிரும் நீங்காதுறையும் இறையாகிய சிவத்தின் விரிந்த விளக்கமே உயிர்களிடத்துக் காணும் அன்பாகிய பண்பென உணர்ந்து எல்லா உயிர்க்கும் அன்புடையாரே அன்புருவாகிய பரமசிவனிடத்தே நீங்காத பேரன்புடையராய் வழிபட்டு ஒழுகுவோர் மேலும் தமக்கும் அன்புடையார் ஆவர். இவ்வுண்மையை உணராதார் அன்பு சிவம் என்பன தனித்த இரு வேறு பொருள்கள் என்றெண்ணிப் பிழைபடப் பேசுவார் என்பார், "அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்" என்றார்.

எவ்வுயிர்க்கும் உயிராய், அன்பே உருவாய்த் திகழும் சிவபரம்பொருளிடத்தே உண்மையான அன்பினைச் செலுத்த எண்ணுவோர் அப்பரம்பொருள் எழுந்தருளியுள்ள கோயில்களாகத் திகழும் ஆருயிர்களிடத்திலே உண்மையான அன்பினைச் செலுத்துதல் வேண்டுமென அறிவுறுத்துவது,

**'எவ்வுயிரும் நீங்காது உறையும் இறை சிவமென்று**
**எவ்வுயிர்க்கும் அன்பா யிரு' (சைவசமயநெறி)**

என வரும் முன்னைச் சான்றோர் வாய்மொழியாகும்.

**'எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும் நின்**
**தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே!'**

**(தாயுமானவ சுவாமிகள்–பராபரக்கண்ணி 65)**

திருச்சிற்றம்பலம்

# பாடலும் பொருளும்

## திருஅருட்பா எனும் மாமறை

பற்றறியா முத்தர்தமை யெல்லாம் வாழைப்
பழம்போல் விழுங்குகின்ற பரமே மாசு
பெற்றறியாப் பெரும்பதமே பதத்தைக் காட்டும்
பெருமானே ஆனந்தப் பேற்றின் வாழ்வே
உற்றறியா தின்னுமின்னும் மறைக ளெல்லாம்
ஓலமிட்டுத் தேடநின்ற ஒன்றே ஒன்றுங்
கற்றறியாப் பேதியேன் றனக்கு மின்பங்
கனிந்தளித்த அருட்கடலே கருணைத் தேவே

– மகாதேவமாலை

**ப**ற்றுவது பந்தம் அப்பற்றறுதல் வீடு என்று ஒரே வரியில் வீடு பேற்றை வள்ளல் பெருமானார் விளக்குகின்றார்.

பிரபஞ்சத்தில் வெறுப்பும், ஜீவர்களிடத்தில் தயவும், கடவுளிடத்தில் அன்பும் என்றும் மாறாமல் இருக்க வேண்டும் என்றும் எழுதியுள்ளார். உலகியல் இன்பத்தை ஒதுக்குவதுதான் பிரபஞ்சத்தின் வெறுப்பு ஆகும்.

ஜீவகாருண்யத்தால் பிரமன் ஆயுசும், பாச வைராக்கியத்தினால் விஷ்ணு ஆயுசும், ஈசுவர பக்தியினால் ருத்ரன் ஆயுசும் பிரம ஞானத்தினால் என்றும் அழியாத சுவர்ண தேகமும் பெறலாம் என்பார்.

பாச வைராக்கியம், பிரபஞ்சத்தின் மீது வெறுப்பு, பற்றறுதல் எல்லாம் ஒன்றே.

உலக இன்பங்களைப் பொருட்படுத்தாமல் அருளியலை நாடி ஆசைகளை அறுத்து யார் யார் நிற்கின்றார்களோ அவர்களையெல்லாம் வாழைப் பழத்தை விழுங்குவது போலத் தன்னுள் ஏற்றுக்கொள்கின்ற ஒப்பற்ற இறைவனே.

குற்றம் என்பது இன்னதென்றே அறியாத பதத்தை உடையவனே.

அந்தத் திருவடி நிலையை, ஆசையை அறுத்து வாழ்கின்ற முத்தர்கட்குக் காட்டுகின்ற பெருமானே.

இந்தத் திருவடி நிலை எங்கே உள்ளது எனில் பற்பூத நிலை கடந்த நாதநிலைக்கப்பால் பரநாத நிலை அதன் மேல் விளங்குகின்றது என்கின்றார்.

சத்து, சித்து, ஆனந்தம் என்று சொல்லக்கூடிய சச்சிதானந்தப் பேற்றை அளிப்பதால் அந்த இறைவனை ஆனந்தப் பேற்றின் வாழ்வே என்று போற்றுகின்றார்.

கிடைத்தற்கரிதாகிய மானிட தேகத்தைப் பெற்றுக் கொண்ட நீங்கள் அனைவரும் கிடைத்த இந்தத் தேகத்தையே நித்திய தேகமாக்கிக் கொண்டு எக்காலத்தும் எதனாலும் தடைபடாத ஒப்பற்றப் பேரின்பப் பெருவாழ்வைப் பெற்று வாழ்தலே ஆன்ம லாபமாகும் என்று வள்ளலார் போதித்தார். ஒப்பற்ற பேரின்பப் பெருவாழ்வை அளித்தற்குரியவன் அவனேயாதலால் அந்த ஆனந்தப் பேற்றின் பெருவாழ்வே என்று புகழ்கின்றார்.

அந்த நாள் தொட்டு இந்த நாள் வரையில் வேதங்களும் வேத விற்பன்னர்களும் எவ்வளவோ ஆய்ந்து ஆய்ந்து ஆழ்ந்து ஆழ்ந்து தேடியும் காணாது புலம்புக் கொண்டே உள்ளவனவாம். இன்னமும் தேடுமாறுதான் அவை உள்ளன. பாடிய வேதங்கள் தேடிய பாதம் என்பார். அந்த இறைவன் எங்காவது தனித்து இருந்தால் அவனைக் கண்டு பிடித்திருக்கலாம். எல்லாப் பொருள்களிலேயும் இரண்டற அவன் கலந்திருப்பதால் புறத்தில் அவனைக் காணாது தேடிக் கொண்டே உள்ளன. அந்த அத்வைத நிலையைத்தான் தேடநின்ற ஒன்றே என்றார்.

அண்டவகை எவ்வளவோ அவ்வளவும், அவற்றில் அமைந்த உயிர் எவ்வளவோ அவ்வளவும் அவைகள் கண்ட பொருள் எவ்வளவோ அவ்வளவும் அவற்றில் கலந்த கலப்பு எவ்வளவோ அவ்வளவும் நிறைந்தே என்பார். இறைவன் எல்லாவற்றுள்ளும் கலந்துள்ள நிறைவினால் அவனே ஒன்று எனப்பட்டான்.

எல்லாவற்றுள்ளும் கலந்து நிறைந்து ஒன்றாக விளங்கும் அந்த அருட் கடலானது, கருணையே வடிவான இறையானது ஒன்றும் கற்று அறியாத அறிவிலியாகிய எனக்கும் இன்பத்தை மனங்கனிந்து அளிக்கின்றதே - என்னே அதன் அருள் - என்னே அதன் கருணை என வியக்கின்றார்.

திருச்சிற்றம்பலம்

## அன்பர்களுக்கு அன்பான வேண்டுகோள்

நமது வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு மாதஇதழ் பல அன்பர்களது ஆதரவால் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இது மேலும் சிறப்புற அன்பர்கள் தாங்கள் செலுத்தவேண்டிய சந்தா தொகையினை செலுத்தி உதவுமாறு தாழ்மையோடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

அன்பர்கள் சந்தா தொகையினை M.O மூலமாகவோ அல்லது அறக்கட்டளையின் வங்கிக் கணக்கிலோ செலுத்தலாம். விபரங்களுக்கு பக்கம் 26ஐ பார்க்கவும். M.O மூலம் செலுத்துவோர் தங்கள் அலைபேசி எண் மற்றும் சந்தா எண்ணை குறிப்பிட்டு அனுப்பவும்.

புதிதாக இணைய விரும்புவோர் 'புதிய சந்தா' எனக் குறிப்பிட்டு அனுப்பவும். வங்கிக் கணக்கில் செலுத்துவோர் பணம் செலுத்தியபின் 8012680865 என்ற அலைபேசி எண்ணிற்கோ அல்லது vallalartrust@gmail.com என்ற இமெயில் முகவரிக்கோ தெரியப்படுத்தவும். நன்றி !!

# மானுடரை மானுடராக்கும் சத்விசாரம் எனும் அற்புத சக்தி

உலகில் மனிதர்களுக்கு இருக்கப்பட்ட சக்திகளில் ஒரு சக்தி மிகவும் சிறப்பானது. நாம் மீதி சக்திகளையெல்லாம் மற்ற பிராணிகளிடத்தில் பார்க்கலாமென்றாலும் ஒரு சக்தியை மட்டும் மனிதனிடத்தில்தான் பார்க்க முடியும். இந்த சக்திக்கு "விசார சக்தி" என்பது பெயர். விசார சக்தியானது முழுவதுமாக மனிதர்களிடத்திலேதான் வாய்க்கப் பெற்றிருக்கிறது. பிராணிகளுக்கும் ஒரு விதமான விசார சக்தி உண்டு. அது எவ்வாறென்றால் யாராவது கையில் தடியை எடுத்துக்கொண்டு வந்தால் அவன் தன்னை அடிக்க வருகின்றான் என்று நினைத்து அவை ஓடும். அல்லது யாராவது புல்லை எடுத்துக்கொண்டு வந்தால் ''தனக்கு ஏதோ கொடுக்கப்போகிறான்'' என்று அருகில் வரும். இதுதான் அவைகளின் விசார சக்தி. வேறு எந்தவிதமான அறிவும் அவைகளுக்குக் கிடையாது.

மனிதனுக்கு எப்படிப்பட்ட விசார சக்தி இருக்கிறது தெரியுமா? வேண்டாத ஒருவன் தனக்கு மிகவும் பிடித்தமான ஒரு பொருளைக் கொண்டு வந்தாலும்கூட ஆளைப் பார்த்துவிட்டு இவன் கொண்டு வந்திருப்பது எனக்குப் பிரியமான பொருளானாலும் "இதை நான் எடுத்துக் கொள்ளக் கூடாது'' என்பதை ஒருவன் தீர்மானம் செய்து கொள்ளலாம். ''இவன் என்னை மோசம் செய்வதற்காகக் கொண்டு வந்திருக்கின்றான். இதை நான் எடுத்துக் கொள்ளக் கூடாது'' என்று ஒருவனுக்குத் தெரியும். அதேசமயம் ஒரு மருத்துவர் வயிற்றையே அறுக்க வந்தாலும், 'இவர் என் வயிற்றை அறுத்தால் எனக்கு இதனால் பிரயோஜனமுண்டு. ஆகையால் இவர் வயிற்றை அறுக்கட்டும்' என்று ஒருவன் விட்டுவிடுவான். ஏன் இவ்வாறென்றால் மனிதனிடத்தில் விசார சக்தி இருக்கின்றது. மீதிப் பிராணிகளிடத்தில் அத்தகைய சக்தி இல்லை. ஆதலால்தான் மனிதனில் ''முழுமை'' என்பது இருக்கின்றது.

உலகில் எல்லோருக்கும் பிடித்தமான பொருட்கள் பல உண்டு. ஆனால் உண்மையில் எல்லோருக்கும் மிகவும் பிரியமான பொருள் எது?

ஒருவனுக்கு தன்மேல்தான் எப்போதும் பிரியமாகவே இருப்பான். மற்றவர்களுக்கு அவன் வேண்டாதவனாக இருந்தாலும்கூட தனக்கு அவன் எப்பொழுதுமே வேண்டியவனாகத்தான் இருப்பான். தனக்குத் தான் வேண்டாதவன் என்று யாராவது சொல்லி நாம் கேட்டிருக்கிறோமா? அவ்வாறு கிடையவே கிடையாது.

பிரியமில்லாத பொருள்கூட ஏதாவதொரு சமயத்தில் பிரியமாக இருக்கலாம். மிகவும் பிரியமான பொருளும் (வேறு சமயத்தில்) பிரியமில்லாததாக மாறிவிடலாம். ஆகையால் எப்பொழுதும் மிகவும் பிரியமாயிருக்கும் பொருள் ஆத்மா எனப்படும் பொருளே.

ஒருவனுக்குச் சர்க்கரைப் பொங்கல் என்பது மிகவும் பிரியமான பொருளாக இருக்கலாம். ஆனால் அவனுக்குச் சர்க்கரை வியாதி வந்துவிட்டால்

“இந்தச் சர்க்கரைப் பொங்கல் எனக்கு வேண்டாம்” என்றே அவன் மனத்திற்குத் தோன்றும். சர்க்கரை வியாதி வந்திருக்கும் சமயத்தில் தேவைப்பட்டால் வேப்பெண்ணையாவது சாப்பிடலாம் என்று தோன்றுமே தவிர சர்க்கரைப் பொங்கலைச் சாப்பிட மனம் வராது. இவ்வளவு நாள் வரை பிடித்தமான பொருளாக இருந்தது இன்று ஏன் பிரியமில்லாத பொருளாக மாறிவிட்டது என்று கேட்டால் எப்பொழுதுமே ஒருவனுக்கு தன் ஆன்மாவைத் தவிர பிடித்ததாக இருக்கக் கூடிய பொருளே இல்லை.

ஒருவன் தான் விழிப்பு நிலையில் இருக்கும் பொழுதும், கனவு நிலையில் இருக்கும் பொழுதும் அவனுக்குப் பிரியமானது ஆத்மா ஒன்றுதான். ஆழ்ந்த உறக்க நிலையிலும் அவனுக்குப் பிரியமானது ஆத்மாதான். உறக்கத்திலும் ஆத்மாவுடைய அறிவு உண்டு. ஆனால் அறியாமையுடைய சேர்க்கை இருப்பதினால் அப்பொழுது நமக்கு ஆத்மாவின் அறிவு தெரிவதில்லை. சில பொருட்களை நாம் பார்ப்போம். அதனுடைய தத்துவங்கள் நமக்குத் தெரியாவிட்டாலும் பொருளை மட்டும் நாம் பார்த்துக் கொண்டிருப்போம். அதேபோல் உறக்கம் முதலான நிலைகளிலும் கூட ஆத்மாவின் இருப்பு உண்டு என்பதுதான் சாஸ்திரங்களின் கூற்று, உறக்க நிலையில் ஆத்மாவின் இருப்பு என்பதே இல்லாதிருந்தால் நாம் விழித்த பிறகு ‘நான் சுகமாகத் தூங்கினேன்’ என்று கூறுவது எவ்வாறு சாத்தியமாகும்? ‘சுகமாக நான் தூங்கினேன்’ என்று கூறும்பொழுது அதற்கு 1.“சுகம்”, 2.“நான்”, 3.“தூங்கினேன்” என்ற மூன்றும் தேவைப்படுகின்றன. உறக்க நிலையின் பொழுது நாம் இல்லாமலிருந்தாலோ அல்லது சுகம் என்ற அனுபவம் இல்லாமல் இருந்தாலோ ‘சுகம் அனுபவித்தேன்’ என்று எவ்வாறு கூற முடியும்? ஆகவே நாமும் இருந்துகொண்டு சுகத்தையும் அனுபவித்துக் கொண்டிருந்தோம் என்றே நாம் கூற வேண்டும். ஆகவே மிகவும் பிரியமாக இருக்கப்பட்ட பொருள் ஆத்மா ஒன்றுதான். இதற்கு ஓர் உதாரணத்தை வித்யாரண்ய மாமுனிவர் ஓரிடத்தில் கூறியுள்ளார்.

ஒரு தந்தை முகச்சவரம் செய்து நாலைந்து நாட்கள் ஆகி அவனுடைய தாடி மயிரெல்லாம் முள்போல் இருக்கும். அவ்வாறு இருக்கும் நிலையில் குழந்தையைக் கட்டிக்கொண்டு “அழாதே குழந்தாய், அழாதே குழந்தாய்” என்று சொல்லி முத்தமிடுவான். இவன் பலமாகக் கட்டி முத்தமிடும்போது அந்தக் குழந்தைக்குத் தாடி மயிர் குத்தி அதிகமாக வலிக்கும். ஆகவே முத்தமிடுவது குழந்தையின் சந்தோஷத்திற்காக அல்ல தந்தையின் சந்தோஷத்திற்காகத்தான் என்று அவர் கூறியுள்ளார்.

குழந்தையின் சந்தோஷத்திற்காகத்தான் ஒருவன் முத்தமிடுகிறான் என்றால் அவன் முதன் முதலிலேயே குழந்தையை விட்டிருக்க வேண்டும் குழந்தையைக் கட்டி அணைத்து அதற்கு மேலும் துன்பத்தை உண்டாக்கக் கூடாது. ஆனால் தந்தையோ அவ்வாறு நிறுத்துவதில்லை. “அழாதே குழந்தாய்” என்று சொல்லிக் கொண்டு மீண்டும் மீண்டும் முத்தம் கொடுத்துக் கொண்டே இருப்பான். ஆகவே ஒருவன் “நான் இவனது சந்தோஷத்திற்காக இதைச் செய்தேன், அவனது சந்தோஷத்திற்காக அதைச் செய்தேன்” என்று கூறுவதெல்லாம் தவறு. ஆகவே மிகவும் பிரியமானவன் நமக்கு யார் என்றால் அவரவர் ஆத்மாதான். இவ்வளவு பிரியமாக இருக்கும்

ஆத்மாவைப் பற்றி என்றாவது விசாரம் செய்திருக்கிறோமா, விசார சக்தியை இறைவன் மனிதனுக்குக் கொடுத்திருக்கிறான். மற்ற பொருட்கள் எல்லாவற்றையும் விசாரம் செய்துதான் பார்க்கிறான் மனிதன். ஆனால் ஆத்மாவைப் பற்றி விசாரம் செய்வதே இல்லை.

ஒருவன் தனக்குப் பசி எடுக்கும்பொழுது அந்தப் பசியை நீக்குவதற்காக முயற்சி செய்வான். பசியை நீக்குவதற்காக ஏதாவது உணவு சாப்பிடலாம். உண்டபின் பசியினால் எற்பட்ட துன்பம் நீங்கிவிடும். அதேபோல் தாகம் ஏற்படுகிறது. அதனால் துன்பம் ஏற்பட்டது. அதைக் தணித்துக் கொண்டவுடன், "ஆஹா, இப்பொழுது திருப்தியாகிவிட்டது" என்று துன்பம் நீங்கிய பிறகு ஒரு சந்தோஷம் வருகிறது. ஆனால் அத்தகைய சந்தோஷம் எவ்வளவு நேரம் நீடிக்கும்? அடுத்த முறை தாகம் வரும்வரைதான் நீடிக்கும். இதேபோல் பசி நீங்கிய இன்பமும் அடுத்த முறை பசி ஏற்படும்வரைதான் இருக்கும். பசி, தாகம் ஆகியவை முதலில் நீங்குகின்றன. மீண்டும் ஏற்படுகின்றன. இவ்வாறு மாறி மாறி வந்துகொண்டே இருக்கின்றன. தினமும் உணவு உண்பது, அருந்துவது, தூங்குவது என ஒரேவிதமான செயல்களைத் தவிர வேறுஎந்த சிறப்பும் உண்டா! சினிமாவிற்குப் போனால் நல்லது என்று கருதுபவர்கள்கூட ஒரே சினிமாவை மீண்டும் மீண்டும் போட்டால், "யார் இதைப் பார்ப்பார்கள்?" என்றுதான் கூறுவார்கள். ஆனால் நாம் தினமும் குளிப்பது, குடிப்பது, சாப்பிடுவது, தூங்குவது, அலுவலகத்தில் வேலை பார்ப்பது போன்ற செயல்களைச் செய்வதில் நமக்கு சலிப்பு ஏற்படுவதே இல்லை.

அறிவு மயங்கியவர்களாய், மீண்டும் மீண்டும் வருகின்ற வியாபாரங்களில் ஈடுபட்டு பந்தத்தினால் ஏமாற்றப்பட்டும் நாம் வருத்தமடைவதில்லை.

இவையெல்லாம் மீண்டும் மிண்டும் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் மோகம் ஏற்பட்டு நாம் வருத்தமே இல்லாமல் வாழ்ந்து இவற்றை அனுபவிக்கிறோம்.

நமக்கு இருக்கக்கூடிய இன்பம் மிகவும் தற்காலிகமானதுதான். உலகில் இருக்கக்கூடிய எந்த ஒரு சுகமும் நிலைத்து இருப்பதில்லை. ஆனால் நாம் எதிர்பார்க்கக்கூடிய சுகமோ வேறுவகையானது.

பெரிய குளம் ஒன்று உள்ளது. அதில் பாசி மிகவும் அடர்ந்து இருக்கிறது. அதில் தண்ணீர் இருக்கிறதா என்று பார்க்க வேண்டி ஒருவன் அதில் ஒரு கல்லை விட்டெறிந்தான். பாசி சிறிதளவு விலகி தண்ணீர் சற்றே தெரிந்தது. ஆனால் அந்த நிலை ஓர் இரண்டு நிமிடங்களுக்கோ, ஐந்து நிமிடங்களோ நீடிக்கும். மீண்டும் அந்தப் பாசியானது தண்ணீரை மூடிவிடும். வெளிப் பொருட்களிலிருந்து வரும் ஆனந்தமும், அவ்வளவு காலம்தான் நமக்கும் நீடிக்கிறது. எவ்வாறு ஒரு பாசியுள்ள குளத்தில் கல்லை விட்டு எரிந்தவுடன் பாசி சற்றே விலகி தண்ணீரை நமக்குக் காட்டுகிறதோ அதேபோல் வெளிப் பொருட்கள் நமக்கு ஆனந்தத்தின் ஒரு சிறிதளவை மட்டும்தான் தருகின்றன. விஷயம் என்பது கல்லுக்கு ஒப்பாகக் கூறப்படுகிறது. இவ்வாறு எவ்வளவு கற்களைத்தான் நாம் வீசிக்கொண்டே இருப்பது? எவ்வளவு முறைதான் மீண்டும், மீண்டும் பாசியானது மூடிக்கொள்வது? நாம் நமக்கு வேண்டிய நிலையான ஆனந்தத்தை எவ்வாறு அனுபவிப்பது?

ஒருவன் ஆத்மாவில் மனதை நிறுத்திய போது அவனது வருத்தங்கள் அனைத்தும் அவனை விட்டு நிரந்தரமாக நீங்கி நிலையான இன்பத்தைப் பெற்றுவிடுகின்றன. இதைத்தான்

**தன்னை அறிய தனக்கொரு கேடில்லை**

**தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்** என்கிறார் திருமூலர்.

சரி எவ்விதம் தன்னை அறிவது? ஒரு கத்தியை நாம் உறையில் இட்டு இருக்கிறோம். உறையிலிருந்து கத்தியை எடுக்காவிட்டால் அந்தக் கத்தியின் வடிவம் நமக்கு எவ்வாறு விளங்கும்? அதை பிரித்துப் பார்ப்பதைக் காட்டிலும் புத்திசாலித்தனம் வேறொன்றும் இல்லை! ஆனால் அதேபோல் உடம்பையே பிரிந்துப் பார்த்துவிடுவோமே என்றால் அது சுலபமா என்ன?

ஒருவன் ஆர்மோனியம் வாசித்துக் கொண்டிருந்தான். அதிலிருந்து மிகவும் அழகான சப்தங்கள் வந்து கொண்டிருந்தன. அவனுக்கு ஓர் ஆசை. "இந்தப் பெட்டியிலிருந்து இவ்வளவு இனிமையான சப்தங்கள் வருகின்றனவே! அது எவ்வாறு என்று தெரிந்து கொள்ள கருவியை உடனேயே பிரித்துப் பார்த்து விடவேண்டும்" என்பதுதான் அந்த ஆசை. அவனும் அந்த வாத்தியத்தை உடனே ஒவ்வொன்றாக பிரித்தெடுத்தான். எந்த விதமான சப்தமும் உள்ளே இல்லை. பாகங்களையெல்லாம் எடுத்துப் பார்த்தால் டக டக வென்றுதான் சப்தம் வந்தது.

சில பொருட்களைப் பற்றி நாம் புரிந்துகொள்ள வேண்டுமானால் அவற்றைப் பிரித்துப் பார்த்து தான் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால் வேறுசில பொருட்களைப் பற்றி புரிந்து கொள்ள வேண்டுமானால் நாம் நம்முடைய விவேகத்தினால்தான் புரிந்து கொள்ள முடியும். அவைகளைப் பிரித்துப் பார்க்க முடியாது. அதே போல ஆன்மாவைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமானால் அதை விவேகத்தினால்தான் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஒருவன் தடாகத்திலுள்ள சுத்தமான நீரை முழுவதுமாகப் பார்க்க வேண்டுமென்றால், பாசி அனைத்தையும் அகற்றிவிட வேண்டும். அதேபோல அஞ்ஞானத்தைப் போக்கிக் கொண்டால் ஒருவன் ஆனந்த ஸ்வரூபியாக இருக்கலாம்.

ஒருவனுக்கு வெளியில் இருந்து எந்தவிதமான ஆனந்தமும் வருவதில்லை. உள்ளிருக்கும் ஆனந்தமே அவ்வப்போது சற்றே வெளிப்படுகிறது. ஆனால் எவ்வாறு பாசியை முழுவதுமாக அகற்றி விடுகிறோமோ அதுபோல அஞ்ஞானத்தை முழுவதுமாகப் போக்கிக் கொண்டால் அந்த ஆனந்தம் என்பது நிலையாக ஏற்பட்டுவிடும். ஆனால் மனிதனானவன் தேவையற்ற வெளி விஷயங்களில் சிந்தனையை செலுத்தி தன்னுடைய பொன்னான காலத்தை வீணாக்கிவிடுகிறான்.


இனி ஒருவன் தன் வாழ்வில் செய்ய வேண்டுவது என்ன? பரம்பொருளில் நிலைத்த ஒரு சத்குருவையே நாட வேண்டும் என்று எல்லா வேதங்களும் கூறுகின்றன. இதனையே நம் வள்ளல் பெருமானாரும் உரைநடைப் பகுதியில் "சிவ பரம்பொருளை அனுபவித்தற்க முக்கியம் ஜீவகாருண்யம், பாசவைராகம், சிவபக்தி. இவை கிடைத்தற்கு முதற்கருவி சாதுக்கள் சார்பு. ஆகலின் அவசியம் சாதுக்கள் சார்பு வேண்டும்" என்று அருளியுள்ளார்.

மானிட ஜென்மம் கிடைத்திருக்கிறது. விசாரம் செய்வதற்க ஓரளவு சக்தியும் கிடைத்திருக்கிறது. அதற்கு ஏற்றாற்போல் சூழ்நிலையும் அமைந்திருக்கிறது. தத்துவத்தைத் தெரியப்படுத்த திருவள்ளுவர், திருமூலர், ஔவையார், வள்ளலார் போன்ற எண்ணற்ற ஞானிகளும் நமக்குக் கிடைத்திருக்கின்றனர். இருந்தபோதும் ஒருவன் கண்களை மூடிக்கொண்டு கண்மூடித்தனமாக வாழ்வதால் என்ன பயன்?

நம் வள்ளல் பெருமானார் பேருபதேசத்தில் அருளியதாவது: “இங்குள்ள நீங்கள் எல்லவரும் இதுவரைக்கும் இருந்ததுபோல் இனியும் வீண்காலம் கழித்துக் கொண்டிராதீர்கள். இதுமுதல் நீங்கள் எல்லவரும் நல்ல விசாரணையில் இருந்து கொண்டிருங்கள்” என்பதாகும்.

ஆக, மனித தேகமும் அற்புதமான விசார சக்தியும் பெற்ற நாம் அநித்தியமாகிய உலகியல் போகங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் நம் வள்ளல் பெருமானும் ஞானிகளும் காட்டிய உண்மை வழியில் நின்று ஆத்ம விசாரமும், ஜீவகாருண்யமும் செய்து வாழ்ந்து அஞ்ஞானம் அகன்று ஆத்மானுபவம் பெற்று நித்திய பேரின்பப் பெருவாழ்வு வாழவேண்டும்.

திருச்சிற்றம்பலம்



# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

**பாணிப்பு இலதாய்ப் பரவினோர்க்கு அருள்புரி 93**
**ஆணிப்பொன் அம்பலத்து அருட்பெருஞ்ஜோதி 94**

பொன் வெள்ளி முதலான உயர்ந்த உலோகங்களின் தரத்தை (மாற்று) அறிவதற்கு அவற்றைக் கல்லில் உரைத்துப் பார்ப்பர். அக்கல்லுக்கு உரைகல் என்று பெயர். மாற்றுயர்ந்த பொன்னால் மாதிரியாக ஓர் ஆணி கெட்டியாய்ச் செய்து வைத்திருப்பர். அதற்கு உரையாணி என்று பெயர் (எழுத்தாணி, அச்சாணி என்பது போல). உரையாணியை உரைகல்லில் உரைத்து மாற்றுப்பார்பர். உரையாணி செய்யப்பெறும் உயர்தரப்பொன் “ஆணிப்பொன்” என்று பெயர் பெற்று விட்டது. உரையாணியை (ஆணிப்பொன்னை) உரைத்தால் என்ன மாற்றுக் காட்டுகிறதோ, அந்த மாற்றை ஏனைய பொன்னும் காட்ட வேண்டும். மாதிரி ஆணிப் பொன்னின் தரத்தில், மாற்றில், உள்ள உயர்மாற்றுப்பொன் ஆணிப்பொன் எனப் பெயர் பெற்றது. இவ்வாறே முத்திலும் ஆணிமுத்து என்னும் வழக்குண்டு.

இறைவன் எழுந்தருளியுள்ள பொன்னம்பலம் மாற்றுயர்ந்த ஆணிப்பொன்னால் ஆனது. “ஆணிப்பொன்னம்பலத்தே கண்ட காட்சிகள் அற்புதக் காட்சியடி” என்ற வள்ளற் பெருமானின் திருவருட்பா பாடல் புகழ்பெற்றது.

| | | |
|---|---|---|
| பாணிப்பு இலதாய் | – | தாமதம் |
| பரவினோர்க்கு அருள்புரி | – | தன்னை வழிபடுவோர்க்கு அருள்புரிகின்ற |
| ஆணிப்பொன்னம்பலத்து | – | ஆணிப்பொன்னம் பலத்திலே எழுந்தருளியுள்ள (இங்கே ஆணிப்பொன்னம்பலம் என்பது சத்தியஞான சபை) |
| அருட்பெருஞ்ஜோதி | – | அருட்பெருஞ்ஜோதி |

ஆணிப்பொன்னம்பலத்து அருட்பெருஞ்ஜோதி, வழிபடுவோர்க்குத் தாமதமின்றி (பாணிப்பு இன்றி) அருள்புரிகிறது. விரைந்து அருள் புரிகிறது. அருள்புரிவதில் அருட்பெருஞ்ஜோதிக்கு உள்ள விரைவு வழிபடுவதில் நமக்கும் இருக்க வேண்டும்.

**மந்தணம் இது என மறுவிலா மதியால் 177**
**அந்தணர் வழுத்தும் அருட்பெருஞ்ஜோதி 178**

| | | |
|---|---|---|
| மந்தணம் இது என | – | மந்திரம் இது என்று, இரகசியம் இது என்று, |
| மறுவிலா மதியால் | – | களங்கமில்லாத அறிவினால் |
| அந்தணர் | – | அந்தண்மையுடைய பெரியோர்கள் |
| வழுத்தும் | – | வணங்கும் |
| அருட்பெருஞ்ஜோதி | – | அருட்பெருஞ்ஜோதி |

அந்தண்மையுடையோர் அந்தணர். சாதி அந்தணர் மட்டுமே அந்தணர் ஆகார். அந்தண்மை (அழகிய தண்மைக் குணங்கள்) உடையோர் அனைவரும் அந்தணரே.

**அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்**
**செந்தண்மை பூண்டொழுக லான் குறள் 30**

என்பது நீத்தார்பெருமை அதிகாரத்து இறுதிக்குறட்பா.

எவ்வுயிர்க்கும் (எல்லா உயிர்களுக்கும்) செந்தண்மை (கருணை) பூண்டு ஒழுகும் அறவோரே அந்தணர் என்பது திருவளுவர் கருத்து.

அந்தண்மை, செந்தண்மை என்னும் சொற்கள் அழகிய, பொருள் பொதிந்த சொற்கள். தண்மை – குளிர்ச்சி, ஈரம். அம் – அழகிய, செம் – செம்மையான. அந்தண்மை – அழகிய தண்மை. செந்தண்மை – செம்மையான தண்மை. அழகிய தண்மைக்குச் **“சித்தம் அழகியார்”** என்ற ஆன்றோர் ஆட்சியைக் கருதுக.

களங்கமில்லாத அறிவினால், எவ்வுயிர்க்கும் கருணை செய்துஒழுகும் அறவோர் இறை ரகசியம் இதுவென்று உணர்ந்து வணங்கும் அருட்பெருஞ்ஜோதி இறைவனே!

திருச்சிற்றம்பலம்

# தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்

அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். **தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.**

ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை

காலை உணவிற்கு - ரூ.2,500/- மதிய உணவிற்கு - ரூ.6,500/-

இரவு உணவிற்கு - ரூ.3,500/-

மாதப்பூச அன்னதானத்திற்கு (மூன்று வேளைக்கும்) - ரூ.12,500/-

பௌர்ணமி சிறப்பு அன்னதானத்திற்கு ரூ.4,000/-

பசு பராமரிப்பிற்கு (ஒரு பசுவிற்கு/ஒரு மாதத்திற்கு) ரூ.2,500/-

அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு) - 15 லிட்டர்

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்**

Please donate - Cheque / DD In favour of

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

Please donate through: **HDFC Bank Ltd.,**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**A/c No. : 08761450000048 IFSC Code: HDFC0000876**

**Please send MO to:**

அருள்திரு பாபு சாது

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம்,
அடிஅண்ணாமலை அஞ்சல், திருஅண்ணாமலை - 606 604.

செல்: +91 9443489849, +91 9942776351

அன்னதானம் பற்றிய விபரங்களுக்கு:- **8012680865, 7502026565**

திருச்சிற்றம்பலம்

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



# கோசாலை



அன்பு உள்ளங்களே!

உயிர்கள் மீது நாம் தயவு காட்டும்போதுதான் இறைவன் நம்மீது தயவு காட்டுவார். அதனால்தான் ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு என்றார் வள்ளல் பெருந்தகை. அந்த வகையில் நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தில் பசுக்களை வைத்து பராமரித்து வருகின்றோம். தயவுள்ளம் கொண்டவர்கள் தங்களால் இயன்ற அளவு பொருளுதவி செய்து பசு பராமரிப்பிற்கு உதவலாம்.

பசு பராமரிப்பிற்கு உதவ விரும்புவோர்
கீழ்கண்ட அலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு: 8883590659, 7502026565**



## வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

- சன்மார்க்க மாதஇதழ்

நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தின் சார்பாக வெளியிடப்படுகின்ற "வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு" மாதஇதழில்

- திருஅருட்பிரகாச வள்ளல் பெருமானார் மற்றும் ஞானியர்களின் ஆன்மீக உபதேசங்கள் அடங்கிய கட்டுரைகள்
- சன்மார்க்க நிகழ்வுகள்
- ஆன்மீக சந்தேகங்களுக்கான தெளிவுரைகள்
- யோக தியான பயிற்சி வகுப்புகள் ஆகியவற்றை அறிந்துகொள்வதற்கு சந்தாதாரராகி பயனடையுங்கள்.

உங்களின் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் சந்தாதாரராக்கி அறிவு தானம் செய்து பயனடையுங்கள். தொடர்புக்கு: **8012680865**

**ஆண்டு சந்தா ரூ.120/-**  **5 வருட சந்தா ரூ.600/-**

Follow us on:

www.vallalarmission.org  www.fasebook.com/vallalarmission

vallalartrust@gmail.com  Group name: vallalarmission Cell no.:9942776351

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly August 2016, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2014-16 Posted at Tiruvannamalai on 16th of every month,
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# அருள் பூரண சித்தி யோகம்

ஒரு நாள் தியான முகாம்...

தன்னையறிந்து இன்பமுறு...

- மன அழுத்தம், வேதனை, மனக்கவலை நீங்க
- நோய்களில் இருந்து விடுபட
- வாழ்க்கையில் பேரின்பம் அடைய



**ஜீவகாருண்யம், பக்தி, தியானம், சத்சங்கம்...**

*இவற்றில் மூழ்கி திளைத்திட ஓர் அரிய வாய்ப்பு*

**நாள்:** செப்டம்பர் 4 ஞாயிறு (ஒருநாள் முழுவதும்)

**நேரம்:** காலை 6:30 மணி முதல் இரவு 7:00 மணி வரை

**இடம்:** விழுப்புரம் வள்ளலார் அருள்மாளிகை சன்மார்க்க சங்கம்,

கிழக்கு பாண்டி ரோடு, LIC அருகில், விழுப்புரம் - 605 602.

**முன்பதிவிற்கு:** 9994856314, 96009 80270

| திரு/திருமதி | Book Post |
| --- | --- |

Redirect to : அருள்திரு **பாபு சாது**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை - 606 604. Cell : 94434 89849, 97896 02258